**வரையறுக்கப்பட்ட மாந்தை சோல்ட் கம்பனி – 2016**

---

வரையறுக்கப்பட்ட மாந்தை சோல்ட் கம்பனியின் (''கம்பனி'') 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கம்பனியினால் உரிமையைக் கொண்டிராத ரூபா 12,100,000 தொகையுடைய காணியின் பெறுமதி செம்மணி (Chemmani) தொழிற்சாலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் கம்பனி இந்தக் காணியின் உரிமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் ஆவணரீதியான சான்றினை வழங்குவதற்கு தவறியிருந்தது.

(ஆ) உப்பு நிலமொன்றை (ஆனையிறவு உப்பளம்) அபிவிருத்தி செய்வதற்கு மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 5,798,042 தெகையான மூலதன அரச மானியம் மீளாய்வாண்டிற்கான முலதனமயமாக்கலுக்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.

(இ) சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) 2.36 ஆம் பிரிவிக்கு முரணாக கம்பனி அதன் வட்டி வருமானத்தினை காசு அடிப்படையில் இனங்கண்டிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் 2017 மார்ச் 31 இல் உள்ளபடியான பெறவேண்டிய வட்டி ரூபா 1,928,419 இனால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) காணியின் உரிமைத்துவம் கம்பனிக்கு மாற்றப்பட்டிராத உப்பு நிலமொனறின் (ஆனையிறவு உப்பளம்) புனர்நிர்மாணத்திற்கு வர்த்தக மற்றும் வாணிப அமைச்சினால் செய்யப்பட்ட ரூபா 51,242,812 தொகையான மூலதன வேலைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| 2017 இல் பிரசுரிக்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான ஒழுக்க வழிகாட்டிக் கோவை<br><br>பட்டியல் - 1 | நிறைவேற்றுப் பணிப்பாளராக செயற்பட்டிருந்த பணிப்பாளரொருவர் தொடர்ச்சியாக சபைக் கூட்டங்களுக்கு அவர் பங்குபற்றியிருக்காததுடன், மேலும் அவர் கம்பனிக்கு ஏதேனும் பெறுமதி சேர்க்கைக்கு பங்களிப்புச் செய்திராதிருந்த போதிலும், 2016 நவம்பர் இல் இருந்து 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு சம்பளம் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 1,170,450 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 807,778 உடன் ஒப்பிடும் போது ரூபா 38,385,184 இனை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 37,577,406 ஆன முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது விற்பனைகள் ரூபா 31,503,573 இனாலும், ஏனைய வருமானம் ரூபா 2,719,193 இனாலும் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 விகிதப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டிற்கான ஈடுபடுத்திய முதல் மீதான திரும்பல் (ஆர்ஓசீஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 25.17 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.14 சதவீதத்திலிருந்து 3.98 சதவீதத்திற்கு அதிகரித்திருந்ததுடன் விரைவுச் சொத்து விகிதம் 1.64 சதவீதத்திலிருந்து 1.89 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 மார்ச் 31 இல் முடிவடைந்து ஆண்டிற்கான கம்பனியின் பாதிடப்பட்ட உப்பு உற்பத்தி மற்றும் அங்கு மதிப்பிடப்பட்ட வருமானம் முறையே 5,500 மெற்றிக்தொன்கள் மற்றும் ரூபா 143,300,000 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 3,336 மெற்றிக் தொன்களினை வெளியிடுவதன் மூலம் அதன் இலக்கிடப்பட்ட வருமானத்தின் 60 சதவீதத்தினை மாத்திரம் கம்பனி அடைத்திருந்ததுடன் பாதிடப்பட்ட விற்பனைகள் வருமானத்தின் 65 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 93,405,977 உள்ளபடியான விற்பனைகள் வருமானமாகக் காணப்பட்டது.

(ஆ) கம்பனி அதன் இலக்கிடப்பட்ட விற்பனைகளினை கருத்திற்கொள்ளாது மற்றும் சந்தை ஆய்வொன்று போன்ற முறையான அடிப்படையொன்றினை கொண்டிராது காலத்திற்குக் காலம் கம்பனி அதன் உப்பின் விற்பனை விலையினை மாற்றியிருந்தது. எவ்வாறாயினும், கம்பனி மெற்றிக் தொன் ஒன்று ரூபா 29,075 இலிருந்து மெற்றிக் தொன் ஒன்று ரூபா 9,000 வரை 2016 செப்தெம்பர் 14 இல் இருந்து 2018 மார்ச் 28 வரையான காலப்பகுதிக்கு எழு தடவைகள் அதன் விலையினை மாற்றியிருந்தது. இருப்பினும், தீர்மானிக்கப்பட்ட விலைக்கு உற்பத்தியின் போதுமான தொகையொன்றை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விலை தீர்மானத்தினை மேற்கொள்ளும் நேரத்தில் நிலவும் உற்பத்தியின் விபரங்களை பகுப்பாய்வுசெய்யும் பொழுது குறித்த காலப்பகுதியின் போது மன்னார் மற்றும் ஆனையிறவு உப்பளத்தில் முறையே ரூபா 122,930,841 மற்றும் ரூபா 17,623,462 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 4.2 பெறுகை முகாமைத்துவம்

கம்பனி 2016 ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்பு சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு முறையானதொரு பெறுகை நடைமுறையினை பின்பற்றியிருக்காததுடன் 2017 ஏப்ரல் 18 தொடக்கம் 2018 பெப்ரவரி 14 வரையான காலப்பகுதிக்கு ரூபா 1,424,018 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் முறையானதொரு வழியில் பாதுகாப்பு சேவைக்கான விலைமனு அழைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம்

2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/Cir-edit/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்தஞ்செய்யப்பட்ட 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், ஆண்டொன்றிற்கு ஆகக்குறைந்தது 06 எண்ணிக்கையான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது கம்பனியினால் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

கம்பனியின் அனைத்து செயற்பாடுகளினதும் உள்ளகக் கட்டுப்பாட்டினை மீளாய்வுசெய்யும் பொருட்டு மீளாய்வாண்டிற்கு ஒட்டுமொத்த கம்பனியையும் மேவுகை செய்யக்கூடியவாறு உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) | களஞ்சியம் மற்றும் உப்பு உற்பத்தியின் விற்பனைகள் | விற்பனை முகாமை மற்றும் உற்பத்தியின் களஞ்சியத்திற்கு, முறையானதொரு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிக் கட்டுப்பாடு | நிலையான வைப்புக்களிலிருந்து திரும்பப்பெறல் மற்றும் காசுப் பாய்ச்சலின் முகாமைக்கு முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |